

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றக் கூட்டு நடவடிக்கைக் குழுவுக்கு அனுப்பப் பட்டதைத் தொடர்ந்து, சிறுபான்மையினர் கூட்டு நடவடிக்கை மன்றத்தின் தலைவர் என்ற முறையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து, இந்தச் சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிராகத் தொடர்ந்து குரலெழுப்பி வருவதற்கு கிறித்தவ அமைப்புகளின் சார்பில் நன்றி தெரிவித்தார்.



கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களை, தி.மு.கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், தனது 79வது பிறந்தநாளினை யொட்டி, நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.





விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசியில் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பட்டாசு தொழிலை பாதுகாக்க வலியுறுத்தி தொழிலாளர் விரோத த.வெ.க அரசைக் கண்டித்து முன்னாள் அமைச்சர் – திருச்சுழி சட்ட மன்ற உறுப்பினர் தங்கம் தென்னரசு தலைமையில் சிவகாசி பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் முன்னாள் எம்.எல்.ஏ. ஏ.ஆர்.ஆர.சீனிவாசன்,மாநகர செயலாளர் உதயசூரியன்,சிவகாசி மேயர் சங்கீதா இன்பம்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு,தலைவர் தங்கராஜ்,மாநில வர்த்தக அணி வனராஜ், மல்லாங்கிணறு போஸ்,ஒன்றிய செயலாளர்கள் பொன்னுத் தம்பி,சந்தானப்பாண்டியன், விவேகன்ராஜ்,மந்திரிஓடை கண்ணன்,செல்வம்,நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன்,காரியாபட்டி செந்தில்,அதிவீரம்பட்டி செல் வம்,கருணாநிதி பாண்டியன், ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி,எம்.ஏ.சந்திரன்,பொதுக் குழு உறுப்பினர் சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள்,பட்டாசு தொழிலா ளர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### 11 வகையான மதுபானங்களின் விற்பனைக்கான தடை உத்தரவை

# 16 மணி நேரத்தில் யாருக்காக த.வெ.க. அரசு வாபஸ் பெற்றது?

## கூட்டணிக் கட்சியின் தொழிலதிபருக்கு சலுகையா?

சென்னை, ஆக. 17 -

தனியார் மதுபான நிறுவனத்தின் 11 வகையான மதுபானங்களுக்கு நேற்று முன்தினம் விதிக்கப்பட்டிருந்த விற்பனை தடையை நீக்கி நேற்று முன்தினம் த.வெ.க. அரசு உத்தரவிட்டுள்ளது. செயற்கையான சுவையூட்டும் பொருட்கள் சேர்க்கப்பட்ட 11 வகை மதுபான தடை உத்தரவை ஒரே நாளில் யாருக்காக வாபஸ் பெற்றது த.வெ.க. அரசு என்றும், ஒரே நாளில் செயற்கையான சுவையூட்டும் பொருட்கள் இல்லாமல் போய்விட்டதா என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழக டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்து 11 வகையான மதுபானங்களுக்கு தடை விதிக்கப்படுவதாக டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் நந்தகுமார் அதிரடியாக அறிவித்தார்.

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லியில் செயல்பட்டு வரும் என்ரிகா என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் 11 வகையான மதுபானங்களுக்கு விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இயற்கை மற்றும் செயற்கை சுவையூட்டும் பொருட்கள் இந்த 11 வகையான மதுபானங்களில் சேர்க்கப்பட்டதாகக் கூறி கடந்த 11ம் தேதி இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் உத்தரவின் அடிப்படையில் குறிப்பிட்ட மதுபானங்களை டாஸ்மாக் கடைகளில் விற்பனையை நிறுத்த தமிழக அரசு உத்தரவிட்டது.

அதன்படி, 1. வி.எஸ்.ஓ.பி. எக்ஸஷ்ணவ கோல்டு பிராந்தி, 2. லூயிஸ் வெர்னான்ட் எக்ஸ்ஓ பிளெண்டட் பிரீமியம் பிராந்தி, 3. மெக்டொவல்ஸ் விஎஸ்ஓபி பிராந்தி, 4. நம்பர்1 மெக்டொவல்ஸ் பைன் பிராந்தி, 5 .மென்ஸ்கிளப் டீலக்ஸ் பிராந்தி, 6.ஹனி பீ பைன் பிராந்தி, 7. என்ரிக்கா விஎஸ்ஓபி செலக்ட் பிராந்தி, 8. என்ரிக்கா பிளாட்டினம் ரிசர்வ் எக்ஸ்ஓ பிராந்தி, 9. என்ரிக்கா பிரீமியம் பிரெஞ்ச் பிராந்தி, 10. வீரன் ஸ்பெஷல் பிராந்தி, 11. என்ரிக்கா ஓல்ட் இண்டி கிளாசிக் டார்க் ரம் உள்ளிட்ட மதுபானங்களை மதுபான கடைகளில் விற்க டாஸ்மாக் நிர்வாகம் தடை உத்தரவு பிறப்பித்தது.

இயற்கை மற்றும் செயற்கை சுவையூட்டும் பொருட்கள் அதிகளவில் சேர்க்கப்பட்டதாக 11 வகையான மதுபானங்களின் தடை உத்தரவை ஒரே நாளில் திரும்பப் பெறப்படுகிறது என்று நேற்று முன்தினம் (15ம் தேதி) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை ஆணையர் கஜலெட்சுமி அறிவித்து உத்தரவு பிறப்பிதுள்ளார். தமிழக அரசால் தடை செய்யபட்ட மதுபானங்கள் ஒரே நாளில் மீண்டும் விற்பனைக்கு அனுமதி அளிக்கப்பட்டது பொதுமக்கள் மற்றும் சமூகஆர்வலர்களிடம் மிகுந்த சந்தேகத்தையும், மதுப்பிரியர்கள் மத்தியில் குழப்பதையும் ஏற்படுத்தியுள்ளது. எப்படி, தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டு 24 மணி நேரத்தில் மீண்டும் விற்பனை செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், இது யாருக்காக அவசர அவசரமாக தடை நீக்கம் செய்யப்பட்டது என்ற கேள்வி எழுந்துள்ளது.

### த.வெ.க. அரசின் சட்டம் – ஒழுங்கு தோல்விக்கு

# தினந்தோறும் தொடரும் கொலைகளே சாட்சி!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஆக. 17 -

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் த.வெ.க. அரசு எந்த அளவுக்கு தோற்று கொண்டிருக்கிறது என்பதற்கு தொடர் கொலைகளே சாட்சி, என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறி யிருப்பதாவது:

சென்னை திருவொற்றியூரில் போதைப்பொருள் புழக்கத்தை தட்டிக்கேட்டதால், அரசுப்பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்த மாணவன் தனுஷ், 30 பேர் கொண்ட கும்பலால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சி அளிக்கிறது. கோவையில் போதை கும்பலை தட்டி கேட்டதற்காக கல்லூரி மாணவன் அமுதன் கொலை செய்யப்பட்ட, அடுத்த சில தினங்களில் சென்னையிலும் இத்தகைய கொடூரம் நடந்திருக்கிறது.

சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் இந்த அரசு எந்த அளவுக்கு தோற்று கொண்டிருக்கிறது என்பதற்கு தமிழ்நாட்டிலே தொடரும் கொலைகளே சாட்சி. போதைப் பொருள் பயன்படுத்துவதையோ, விற்பதையோ அம்பலப்படுத்தினால், அவர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்பது, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் விடப்படும் எச்சரிக்கை. நிர்வாக திறனற்ற இந்த கோமாளி சர்க்காரை கண்டு சமூக விரோதிகளுக்கு துளியும் பயமில்லை என்பதே இதற்கு காரணம்.

குறிப்பாக பள்ளி, கல்லூரிகளில் இத்தகைய சம்பவங்கள் நடப்பதை அரசு கண்டும் காணாமல் வாயை மூடிக் கொண்டு இருப்பது வெட்கக் கேடு. மாணவன் தனுஷ் கொலை வழக்கில் குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய வேண்டும். இத்தகைய தொடர் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் போதைப் பொருள் பயன்பாடு இருக்கிறதா, அதற்கு என்ன காரணம், இதன் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் உரிய முறையில் விசாரித்து இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், வன்முறை எதற்கும் தீர்வல்ல என்பதை உணர்த்தும் வகையில் மாணவர்கள் மத்தியில் ஆலோசனை வழங்கி போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அன்னதான கூடத்தில் நடைபெற்ற சமபந்தி நிகழ்ச்சியில் ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணிவேந்தன் கலந்து கொண்டு சமபந்தி விருந்தினை தொடங்கி வைத்து பொதுமக்களுடன் அமர்ந்து உணவருந்தினார். உடன் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், உதவி ஆணையர் சக்திவேல் உள்ளனர்,



திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் சார்பில் நடைபெற்ற கர்ப்பிணி தாய்மார்களுக்கான வளைகாப்பு நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் பரிசுப்00 பெட்டகங்கள் வழங்கி வாழ்த்தினார்.உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், டாக்டர் குணசிங், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், அசோக் தியாகராஜன், டாக்டர் கவிதா, குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம் உட்பட பலர் உள்ளனர்.